## சுருக்கம்

சட்டக் கல்வி – 2016 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஹாங்காங்கில் நடைபெற்ற சர்வதேச மாதிரி நீதிமன்றப்போட்டியில் கலந்து கொண்டமை – தமிழ்நாடு தேசிய சட்டப் பள்ளியின் இரு மாணவர்களுக்கு தலா ரூ.76,205/–வீதம் மொத்தம் ரூ.1,52,410/– நிதி மீள் ஒப்பளிப்பு செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

## சட்ட (சக)த் துறை

அரசாணை (நிலை) எண்.11

நாள் 05.01.2017
துன்முகி வருடம் – மார்கழி–21
திருவள்ளுவர் ஆண்டு 2047.

படிக்கப்பட்டது:

பதிவாளர், தமிழ்நாடு தேசிய சட்டப் பள்ளி, அவர்களிடமிருந்து பெறப்பட்ட கடிதம் எண். 42–44/REGR/TNNLS/2016, நாள் 05.10.2016.

* * * * *

ஆணை:

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், பதிவாளர், தமிழ்நாடு தேசிய சட்டப் பள்ளி அவர்கள், அச்சட்டப்பள்ளியின் இரு மாணவர்கள் 2016–ஆம் ஆண்டு, மார்ச் மாதம், ஹாங்காங்கில் நடைபெற்ற சர்வதேச மாதிரி நீதிமன்ற போட்டியில் கலந்துகொண்டு வெற்றி பெற்றுள்ளதாகத் தெரிவித்து, அப்போட்டியில் கலந்து கொள்வதற்காக அவ்விரு மாணவர்களால் செலவிடப்பட்ட தொகையான ரூ.1,56,714/–ஐ அம்மாணவர்களுக்கு மீள் ஒப்பளிப்பு வழங்கி ஆணை பிறப்பிக்குமாறு அரசினைக் கேட்டுக் கொண்டார்.

2. பதிவாளர், தமிழ்நாடு தேசிய சட்டப் பள்ளி அவர்களின் கோரிக்கையினை கவனமுடன் பரிசீலித்த அரசு, அதனை ஏற்று, தமிழ்நாடு தேசிய சட்டப் பள்ளியில் பயின்று வரும் கீழ்க்கண்ட இரு மாணவர்களுக்கு, 2016–ஆம் ஆண்டில், மார்ச் மாதத்தில் ஹாங்காங்கில் நடைபெற்ற சர்வதேச மாதிரி நீதிமன்ற போட்டியில் கலந்துகொண்டமைக்காக, அம்மாணவர்களால் செலவிடப்பட்ட தொகையில், மாணவர் ஒருவருக்கு தலா ரூ.76,205/– (ரூபாய் எழுபத்தாறாயிரத்து இருநூற்று ஐந்து மட்டும்) வீதம் மொத்தம் ரூ.1,52,410/– (ரூபாய் ஒரு இலட்சத்து ஐம்பத்து இரண்டாயிரத்து நானூற்று பத்து மட்டும்)–ஐ மீள் ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடுகிறது:-

1. திரு ஆகாஷ் குப்தா (BA0130005) – 4-ஆம் ஆண்டு பி.ஏ.,எல்.எல்.பி(சீர்மிகு)
2. செல்வி கரோலின் சூசன் ஜான்சன் (BA0130018) – 4–ஆம் ஆண்டு பி.ஏ.,எல்.எல்.பி(சீர்மிகு)

3. மேலே பத்தி 2–ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்:-

"2202-பொதுக்கல்வி – 03. பல்கலைக்கழகக் கல்வியும் உயர்கல்வியும் – 102. பல்கலைக்கழகங்களுக்கு நிதி உதவி – I. திட்டத்தில் சேராதது – BO. தேசிய சட்டப்பள்ளி, திருச்சி – 09. உதவித்தொகை – 01. நடப்புச் செலவுக்கான உதவித்தொகை (கு.தொ.கு. 2202-03-102-BO-0915)".

4. மேலே பத்தி 2–இல் ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினத்திற்கான கூடுதல் நிதி ஒதுக்கம் 2016–2017 ஆம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீடு/ இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். மேற்படி நிதி ஒதுக்கம் செய்யப்படுவதை எதிர்நோக்கி, மேலே பத்தி 2–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை பெற்று பதிவாளர், தமிழ்நாடு தேசிய சட்டப்பள்ளி அவர்களுக்கு வழங்குவதற்கு சட்டக்கல்வி இயக்குநர் அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேற்படி தொகையினை 2016–2017–ம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கக் கருத்துருவுடன் சேர்த்து அரசு நிதித்துறைக்கு உரிய நேரத்தில் தவறாமல் சமர்ப்பிக்கும்படி பதிவாளர், தமிழ்நாடு தேசிய சட்டப்பள்ளி அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேற்சொன்ன உரிய தொகையினை பெற்று வழங்கியபின், போட்டிக்குச் சென்று வந்த மாணவர்களின் செலவுச் சீட்டு பட்டியை (Bills) பதிவாளர், தமிழ்நாடு தேசிய சட்டப்பள்ளியிடமிருந்து பெற்று சரிசெய்யுமாறு சட்டக்கல்வி இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

5. போட்டியில் கலந்து கொண்ட மேற்சொன்ன இரு மாணவர்களிடமிருந்து அப்போட்டியின் உபயோகம் குறித்தான அறிக்கையினை பெற்று அரசுக்கு அனுப்பிவைக்குமாறு பதிவாளர், தமிழ்நாடு தேசிய சட்டப்பள்ளி அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.67727/உ்ள்-II/2016, நாள் 30.12.2016–ல் பெறப்பட்டுள்ள ஒப்புதலுடனும், கூடுதல் நிதி ஒதுக்கப் பேரேட்டு எண்.1761 (ஆயிரத்து எழுநூற்று அறுபத்து ஒன்று) உடனும் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சு.ச.பூவலிங்கம்,
அரசு செயலாளர்(பொ)

<u>பெறுநர்:</u>

1. சட்டக் கல்வி இயக்குநர், கீழ்ப்பாக்கம், சென்னை – 600 010.
2. பதிவாளர், தமிழ்நாடு தேசிய சட்டப்பள்ளி, திருச்சி – 620 009.
3. சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை – 600 035.

<u>நகல் :</u>

1. நிதி (உள்.II/வ.செ.பொ.II) துறை, தலைமைச் செயலகம், சென்னை – 600 009.
2. மாண்புமிகு அமைச்சர் (சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள்) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், தலைமைச் செயலகம், சென்னை – 600 009.
3. மாநில கணக்காய்வாளர், சென்னை – 600 018/600 035.
4. இருப்பிட தணிக்கை அலுவலர், தலைமைச் செயலகம், சென்னை – 600 009.

இருப்பு கோப்பு/ உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

த.கவிதா
5.1.17
பிரிவு அலுவலர்.

05/01/17